# International Federation of Tamils

18 Rue des Paquis,1201 Geneva, Switzerland

tel/Fax 00 41 22 7320 831 ift@bluewin.ch


*04 நவம்பர் 2007*

## பலபரிமாணம் கொண்ட தமிழ்ச்செல்வனை இழந்து தவிக்கின்றோம்!

தமிழீழ தேசத்தினதும், தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தினதும் அரசியல் விவகாரங்களையும், இராஜரீக விவகாரங்களையும் ஒருங்கிணைத்து செயற்படுத்தி வந்த பிரிகேடியர் சுப.தமிழ்ச்செல்வன் அவர்களின் இழப்பு புலம்பெயர் தமிழ் சமூகத்தினிடையே ஆழ்ந்த துயரத்தினை ஏற்படுத்தியுள்ளது.

மிக நீண்ட காலம் தமிழீழ தேசிய தலைவர் வே.பிரபாகரன் அவர்களின் வழிநடத்தலில் தமிழீழ தேசிய விடுதலைப் போருக்கான அரசியல் - இராணுவ முனைகளிற் செயற்பட்டு, செழுமையுற்ற ஞானமும் - முதிர்ச்சியும் கொண்ட முதல் நிலைப் பேச்சுவார்த்தையாளராகச் செயற்பட்டு வந்த திரு.தமிழ்ச்செல்வன் அவர்களை இழந்தமை தமிழ் தேசியத்துக்கு ஏற்பட்ட மற்றுமொரு துன்பகரமான இழப்பாகும்.

நோர்வே ஏற்பாட்டில் இடம்பெற்ற சமாதான முயற்சிகளின் ஒரு பகுதியாக பல்வேறு சர்வதேச நாடுகளுக்குப் பயணம் சென்ற தமிழ்ச்செல்வன் அவர்கள் தமது அரசியல்-இராஜரீகப் பணிகளுக்கு இடையே தமது தனிப்பட்ட பண்புகளால் புலத்தமிழ் அறிஞர்கள், கல்வியாளர்கள், செயற்பாட்டாளர்கள் பலரை ஈர்த்து அவர்களுக்கு நம்பிக்கையூட்டி வந்தார். தமிழீழ விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால தன்னாட்சி சபை தொடர்பான வரைவினை உருவாக்குவாற்காக புலத்துத் தமிழ் அறிஞர்களையுயம் ஈடுபடுத்தி ஒன்றுபட்ட தமிழ் தேசியத்தின் வீச்சை பலப்படுத்துவதில் தமிழ்செல்வன் முன்னுதாரணமாகவும் திகழ்ந்தார்.

நமது பணிமனைக்குப் பலதடவை வருகை தந்தும், நம்மோடு தொடர்பு கொண்டும் அனைத்துத் தமிழ் கல்வியாளர்கள், சிந்தனையாளர்களை நாம் இணைத்து, தமிழ் தேசியத்தை ஒன்றுதிரண்ட சக்தியாக்கும் முயற்சியில், ஒன்றுபட்டுழைக்க வேண்டும் என அவர் அறிவுறுத்தியும், உற்சாகப்படுத்தியும் வந்தார்.

தமிழீழம் விடிவுபெறும் என்ற நம்பிக்கையினை அடித்தளமாகக் கொண்ட இராஜரீக அணுகு முறைகளைகளை பாதுகாத்தவாறு, சர்வதேச செல்நெறியினூடு உருவாகிவரும் தமிழீழத்தின் நலன்களைப் பொருத்திப் பார்த்து - சாத்தியங்களை செயற்படுத்தும் இராஜரீக பார்வையை கொண்டவராக தமிழ்செல்வன் அவர்கள் செயற்பட்டார் என்பதே அவருடனான எமது பணிசார் தொடர்பாடல்களில் நாம் பெற்ற அனுபவமாகும்.

மேலும், சிங்கள தேசியவாத அரசின் இராணுவ நிகழ்ச்சிநிரலை அப்பட்டமாக நிரூபிக்கும் விதத்தில் இந்தப் படுகொலையை சிறீலங்கா செய்துள்ளது. சமாதானத்தினை ஆதரிப்பதாகக் கூறிக்கொள்ளும் சில தரப்புக்களின் இராணுவ ஆதரவுடன் சிறீலங்கா நடாத்தும் இத்தகைய படுகொலை மற்றும் இராணுவ நடவடிக்கைகள் இலங்கைத் தீவினதும் - தென்னாசியாவினதும் உண்மையான அமைதிக்கும், உறுதித்தன்மைக்கும் நீண்டகால பின்னிடைவுகளை ஏற்படுத்த கூடிய திசையில் பயணிக்கின்றன. ஒடுக்கப்பட்ட மக்கள் மீது திணிக்கப்படும் இராணுவ வன்முறைகள் மூலம் சமாதானமும், இணக்கமும் ஏற்படா என்பதை சமாதானத்தினை ஆதரிப்பதாகக் கூறியவாறு இராணுவ வழியில் உதவும் நாடுகள் உணர்வதே உண்மையான சமாதானத்தினை இலங்கைத்தீவில் ஏற்படுத்த வழிசமைக்கும்.

பிரிகேடியர் சுப.தமிழ்செல்வன் விட்டுச்சென்ற பணிகளை, அவர் விரும்பியது போன்றே, தமிழீழ தேசியத் தலைவரின் வழிநடத்தலில் நிறைவேற்ற, புலத்தமிழ்ச் சமூகம் உழைக்கும். சுப.தமிழ்செல்வனின் இழப்பால் துன்புறும் அவரது குடும்பத்தினர், நண்பர்கள் மற்றும் பொது மக்களின் உணர்வுகளுடன் நாமும் இணைந்து கொள்கின்றோம்.

**அனைத்துலக தமிழர் கூட்டமைப்பு - ஜெனீவா**